# 5

# உணர்ச்சிப்பாங்கு!

தன்னுடைய திருமணம் அதிருஷ்டமானது என்று எண்ணின அநேக பெண்களின் குடும்பங்களோடு நான் அறிமுகமாகியிருக்கிறேன். தங்களுடைய கற்பனைகள் கெட்டதாகும் அளவு கற்பனை கதைகளை அவர்கள் படித்திருக்கிறார்கள். தங்களுடைய கற்பனை உலகத்திற்குள் அவர்கள் வாழுகிறார்கள். உணர்வுமிகுந்த மனங்களும் மேலான சுத்திகரிக்கப்பட்ட ஒழுங்கும் கொண்டவர்களாக அவர்கள் தங்களை எண்ணிக்கொள்ளுகிறார்கள். தங்களுடைய கணவன்மார்கள் சுத்திகரிக்கப் படாதவர்களும், தாங்கள் எண்ணியிருக்கிற தங்களுடைய ஒழுங்கையும் தூய்மையான நிர்வாகத்தையும் போற்றுவதற்கேதுவான மேன்மையான குணங்களைக் கொண்டிராதவர்களுமாயிருப்பதால், தாங்கள் மிகவும் வேதனைப்படுவதாகவும், கொலை செய்யப்படுவதாகவும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இந்தக் காரியத்தில் வெறிபிடித்தவர்களாகும்வரை அதைக்குறித்து இந்த பெண்கள் பேசியிருக்கிறார்கள், சிந்தித்திருக்கிறார்கள். மற்ற அழியக்கூடியவர்களைக் காட்டிலும் தங்களுடைய தகுதி மேன்மையானது என்றும், சாதாரண மனிதர்களுடன் தங்களுடைய சிறந்த உணர்ச்சிகள் தோழமைகொள்வது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்றும் கற்பனை செய்துகொள்ளுகிறார்கள்.

இந்த வகுப்பைச் சார்ந்த பெண்கள், கதைகள் வாசிப்பதாலும், பகற்கனவு காண்பதாலும், கற்பனை கோட்டைகளைக் கட்டுவதாலும், கற்பனை உலகிலே வாழுவதால், தங்கள் கற்பனைகளைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் கருத்துக்களை அன்றாட வாழ்க்கைக் கடமைகளுக்குக் கொண்டுவருவதில்லை. தங்கள் பாதையில் கிடக்கும் வாழ்க்கை பாரங்களை எடுத்து, தங்கள் கணவன்களுக்கு தங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியான ஆனந்தமான இல்லமாக இவர்கள் ஆக்குகிறதில்லை. தங்கள் பாரங்களை சுமந்தவர்களாக அவர்கள்மேல் சாய்ந்துகொள்ளுவதில்லை. தாங்கள் விரும்புகிறதைப்போல மற்றவர்களிடம் குற்றம் காண்பதிலும் கேள்வி கேட்பதிலும் தங்களுக்கு சுதந்தரமிருப்பதாக நினைத்து, மற்றவர்கள் தங்களுடைய தேவைகளைக் கவனித்து தங்களுக்குச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் போற்றப்படுவதில்லை என்றும், தங்களுக்குத் தகுதியான அனைத்து கனத்தையும் தங்கள் கணவன்மார்கள் கொடுப்பதில்லை என்றும் தொடர்சியாக நினைத்து, இந்த பெண்கள் ஒருவிதமான நேசத்தால் அடையும் சோகத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் தங்களைத் தியாகிகளாக கற்பனை செய்துகொள்ளுகிறார்கள்.

உண்மை என்னவென்றால்: அவர்கள் தங்களை உபயோக மானவர்களாக காண்பித்தால், அவர்களுடைய மதிப்பு பாராட்டப்படும். அதற்கு மாறாக, மற்றவர்களின் கவனத்தையும் பரிதாபத்தையும் தொடர்ந்து பெற முயற்சித்து, அதைத் திரும்பக் கொடுக்க எந்த நிர்பந்தமும் இல்லாதவர்களைப்போல, தயவின்றியும், மற்றவர்களோடு பழகாமலும், எவரும் அண்டக்கூடாதவர்களும், மற்றவர்களுடைய எவ்வித பாரத்தையும் சுமக்காத அல்லது மற்றவர்களின் வேதனைகளை உணராதவர்களாக கடந்துபோவர்களானால், அவர்களுடைய வாழ்க்கையில் மதிப்பானதும், விலையுயர்ந்ததும் மிகக் குறைவாகவே இருக்கும். தங்கள் புருஷரை மணப்பதற்கு தாங்கள் இறங்கி வந்திருப்பதாக நினைக்கும்படி இந்தப் பெண்கள் தங்களை பயிற்றுவித்திருக்கிறார்கள். அதைப்போலவே நடந்தும் கொள்வதினால், அவர்களுடைய மேலான ஒழுங்குகள் ஒருபோதும் முழுமையாக பாராட்டப்படாது.

தங்கள் கரியங்களை முற்றும் தவறான வெளிச்சத்தில் அவர்கள் காண்கிறார்கள். அவர்கள் தங்களுடைய புருஷர்களுக்கு தகுதியானவர்கள் அல்ல. அவர்களுடைய பராமரிப்பிற்கும் பொறுமைக்கும் அவர்கள் நிலையான பாரமாக இருக்கிறார்கள். அதேசமயம், கதைகளிலும் காதல் கதைகளிலும் காணப்படும் பொய்யான வாழ்க்கையை கற்பனை செய்வதை விடுத்து, தங்கள் கணவர்களோடு சேர்ந்து வாழ்க்கையின் பாரங்களை சுமந்து, அவர்களுக்கு உதவியாயிருக்கவும்முடியும். மற்றவர்கள் தங்களுக்குச் செய்யக் காத்திருந்து, உண்டு, உடுத்தி, சுவாசிக்க மட்டுமே தகுதியுடைய இத்தகைய உபயோகமற்ற இயந்திரங்களோடு கட்டப்பட்டிருக்கிற ஆண்கள்மேல் ஆண்டவர் இரக்கப்படுவாராக.

உணர்வுள்ள ஒழுங்குகளை பெற்றிருப்பதாக நினைத்திருக்கும் இந்தப் பெண்கள், மிகவும் உபயோகமான மனைவிகளாகவும் தாய்மார்களாகவும் ஆகட்டும். உபயோகமாகச் செயல்படுகின்ற தங்கள் கணவன்களிடமிருந்து பிரியத்தை விலக்கி, மற்ற ஆண்களுக்கு அதிக கவனத்தை அவர்கள் கொடுப்பதுவே பலவேளைகளில் இதற்குக் காரணமாயிருக்கிறது. நேசத்தால் சோகமடைந்தவர்களாக, மற்றவர்களின் பரிதாபங்களை சம்பாதித்து, தங்களுடைய போராட்டங்களையும் பிரச்சனைகளையும் உயர்ந்த உன்னத வேலையைச் செய்ய தங்களுக்கிருக்கும் ஆவலையும் கூறி, தங்களுடைய திருமண வாழ்க்கை ஒரு ஏமாற்றம் என்கிற உண்மையைச் செயல்படுத்தி, தாங்கள் செய்ய நினைத்த வேலையைச் செய்ய அது ஒரு தடையாக இருக்கிறது என்கிறார்கள்.

மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய குடும்பங்களில் என்ன அவலநிலை இருக்கிறது! இந்தப் பெண்கள் தங்களுக்கும், தங்கள் கணவன்களுக்கும் ஒரு சாபமாக இருக்கிறார்கள். தங்களை தூதர்களாக நினைப்பதால், முட்டாள்களாக்குகிறார்கள். அவர்கள் பாரமான சுமையேயன்றி வேறல்ல. செய்யும்படி ஆண்டவர் அவர்கள் பாதையில் நியமித்த வாழ்க்கைக் கடமைகளை விடுத்து, அமைதியற்றவர்களும் குற்றப்படுத்துகிறவர்களுமாகி, இலகுவாக, உயர்வான, ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைகளை மாத்திரம் எப்போதும் தேடுகிறார்கள். தங்களை தூதர்களாக நினைத்திருக்கும்போது வெறும் மனிதர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் பதறுகிற, சிடுசிடுக்கிற, திருப்திப்படாதவர்களாக, கணவர்களின் அதிகப்படியான நேரம் தங்களுக்காக செலவுசெய்யப்படாததினால் அவர்கள்மேல் பொறாமை கொள்ளுகிறவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் செய்யவேண்டிய அதே வேலையை தங்கள் கணவன்கள் செய்துகொண்டிருக்க, தாங்கள் நெகிழப்படுவதாக குறை சொல்லுகிறார்கள். இந்த வகுப்பாரிடம் சாத்தான் மிக இலகுவான நுழைவைப் பெறுகிறான். தங்களை விடுத்து, மற்ற எவர்மேலும் அவர்கள் உண்மையான அன்பு கொண்டில்லை. என்றாலும் இப்படிப்பட்ட ஒரு நபர் அவர்களுடைய கணவனாக இருந்தால், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று சாத்தான் அவர்களிடம் சொல்லுகிறான். அவர்கள் சாத்தானுடைய திட்டங்களுக்கு இலகுவாக பலியாகக்கூடியவர் களாக இருந்து, தங்களுடைய சொந்த கணவன்களை கனஈனப்படுத்தி, தேவனுடைய பிரமாணங்களை மீற இலகுவாக நடத்தப்படுகிறார்கள்.

இப்படி விளக்கப்படக்கூடிய பெண்களைக்குறித்து: நீங்கள், உங்களுடைய சொந்த மகிழ்ச்சியை உண்டாக்கலாம்; அல்லது அதை அழித்துப்போடலாம். உங்களுடைய நிலையை மகிழ்ச்சியுள்ளதாக்கலாம் அல்லது தாங்கக்கூடாததாக்கலாம்; நீங்கள் கையாளும் முறை உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் அல்லது துன்பத்தைக் கொடுக்கும் என்று சொல்லுகிறேன். உபயோகமின்மையாலும், சிடுசிடுப்பதாலும், குற்றம் காண்பதாலும், சிந்தும் கண்ணீரினாலும் தங்கள் கணவன்கள் தங்கள் நிமித்தம் தளர்வடைவார்கள் என்று, தங்கள் வாழ்க்கை பரிதாபத்திற்குரியது என்று கற்பனை செய்கிற இவர்கள் ஒருபோதும் யோசித்ததில்லயா? அவர்களுடைய எரிச்சலூட்டுகிற சிடுசிடுப்பான குணம், அவர்களுடைய கணவர்களின் பிரியத்தை அவர்களிடமிருந்து குறைந்து, இல்லத்திற்கு வெளியே அனுதாபத்தையும் சமாதானத்தையும் ஆறுதலையும் பெற அவர்களை நடத்துகிறது. விஷமான சூழல் அவர்கள் தங்குமிடத்தில் நிலவுகிறது. இளைப்பாறுதலும், சமாதானமும் சந்தோஷமும் இல்லாத இடமாக இல்லம் மாறுகிறது. கணவன் சாத்தானுடைய சோதனைக்கு

ஆளாகிறான். தடுக்கப்பட்டுள்ள பொருட்களின்மேல் அவன் பிரியம் தங்குகிறது. குற்றம்புரிய தூண்டப்பட்டு, அவன் முடிவாக தொலைந்துபோகிறான்.

பெண்களுடைய—விசேஷமாக மனைவிகளும் தாய்களுமாயிருக்கிற பெண்களுடைய வேலையும் ஊழியமும் மிகவும் பெரியது. அவர்கள் தங்களைச் சுற்றிலும் இருக்கிற அனைவருக்கும் ஆசீர்வாதமாயிருக்கலாம். நன்மைக்கேதுவான வல்லமையான செல்வாக்கை அவர்கள் கொண்டிருக்கலாம். தன்னுடைய வழியையும் சித்தத்தையும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தனது மனதையும் பிரியத்தையும் சரீரத்தையும் கட்டுப்படுத்த அவரை அனுமதிப்பார்களானால், மாற்றுகின்ற ஒரு வல்லமையை பெண் கொண்டிருக்கமுடியும். தாங்கள் தோழமை கொள்ளுகிறவர்களை சுத்திகரித்து உயர்த்துகிற ஒரு செல்வாக்கை அவர்கள் கொண்டிருக்கலாம். ஆனால் தான் கொண்டிருக்கும் வல்லமையை பொதுவாக அவள் உணருவதில்லை. தான் உணராத ஒரு செல்வாக்கை அவள் செலுத்துகிறாள். புதுப்பிக்கப்பட்ட இருதயத்திலிருந்து பரிசுத்தமடைந்த வாழ்க்கையிலிருந்து இயற்கையாகவே கிரியை செய்கிறதுபோலத் தோன்றுகிறது. தெய்வீகம் நாட்டிய நல்ல மரத்தில் இயற்கையாக வளரும் கனியாக அது இருக்கிறது. கிறிஸ்துவின் வாழ்க்கைக்குள்ளாக அவளுடைய சுயம் மறக்கப்பட்டு, மூழ்கடிக்கப்படுகிறது. அவளுடைய மூச்சைப்போன்று நற்கிரியைகளில் ஐசுவரியவானாக இருப்பது அவளுக்கு இருக்கிறது. மற்றவர்களுக்கு நன்மை செய்ய அவள் வாழ்கிறாள். என்றபோதும் தான் அப்பிரயோஜனமற்ற ஊழியக்காரி என்று சொல்ல ஆயத்தமாயிருக்கிறாள்.

தேவன் பெண்ணுக்கு அவளுடைய ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அவள் தாழ்மையாக, தன்னால் முடிந்தவரை, உண்மையோடும் அன்போடும் தன் கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளை செய்து, தன்னைச் சுற்றிலும் இருக்கிறவர்களை பிரகாசிப்பிக்கிறதற்கு ஏதுவாக உபயோகமான தூய்மையான நற்குணம்கொண்ட தன்னுடைய வாழ்க்கை யினால் பரிசுத்த ஒளி மிளிர தொடர்ந்து பிரயாசப்பட்டு, தன்னுடைய இல்லத்தை பரலோகமாக ஆக்கும்போது, தன்னுடைய ஆண்டவரால் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்கிறாள். அப்போது, “நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, ... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்கிறதை அவருடைய தெய்வீக உதடுகளிலிருந்து கேட்பாள். தங்கள் கைகளுக்கு நேரிடுவதை, ஆனந்தத்தோடும் ஆவலின் உற்சாகத்தோடும் செய்து, தங்கள் கணவன்மார்களுக்கு பாரம் சுமக்க உதவி, பிள்ளைகளை தேவ னுக்கென்று பயிற்றுவிக்கிறவர்கள் உயர்ந்தவிதத்தில் மிஷனரிகளாக

இருக்கிறார்கள். மேலான வாழ்க்கைக்கு மனிதர்களை ஆயத்தப்படுத்தும்படி இந்த பூமியில் செய்யப்படவேண்டிய மாபெரும் வேலையின் முக்கியமான கிளையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பிள்ளைகள் பரலோகத்திற்காகவும் ஆண்டவருடைய இராஜ்யத்தின் பிராகாரங்களில் பொருந்துவதற்காகவும் பயிற்றுவிக்கப்படவேண்டும். பெற்றோர்கள் விசேஷ மாக தாய்மார்கள், செய்யும்படி தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கிற பொறுப்பைக்குறித்த உண்மையான உணர்வை பெற்றிருப்பார்களானால், தங்களுக்குப் பங்கில்லாத அயலகத்தாரைக்குறித்த காரியங்களில் அதிகம் ஈடுபடமாட்டார்கள். அயலாகத்தாரின் குறைகளையும் நிலையற்ற நிலையையும் யோசித்து. நாகரீகமான புறங்கூறும் வேலையில் ஈடுபடமாட்டர்கள். தங்கள் பிள்ளைகளின் கவனிப்பைக்குறித்த ஒரு பெரிய பாரத்தை உணருவதால், தங்கள் அயலகத்தாரை பரிகசிக்க அவர்களுக்கு நேமிருக்காது. புறங்கூறுகிறவர்களும், கோள்சொல்லுகிறவர்களும் அக்கம்பக்கத்திலும் சபையிலும் பயங்கரமான சாபங்களாக இருக்கிறார்கள். இவர்களிலிருந்தே இரண்டில் மூன்று பங்கு பிரச்சனைகள் தோன்றுகிறது.

இன்றைய கடமையை உண்மையோடு செய்யவேண்டுமென்று தேவன் வேண்டுகிறார். கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களால் இது அதிகமாக நெகிழப்படுகிறது. விசேஷமாக, தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களைக் காட்டிலும், தாங்கள் மேலான ஒழுங்குகொண்டவர்கள் என்று நினைக்கிற—நான் குறிப்ப்ட்ட வகுப்பைச் சார்ந்த பெண்களால் நிகழ்கால கடமை மறுக்கப்பட்டே போய்விடுகிறது. அவர்களுடைய மனது இவ்விதமாக சிந்திக்கிறது என்பதே, அவர்கள் குறுகிய அகந்தையான சுயநலமான தாழ்ந்த குணம் கொண்டவர்கள் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. ஏழ்மையும் தாழ்மையுமான ஏழைகளுக்கு மேலாக உயர்ந்தவர்களாக உணருகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் அழைத்திருப்பதாக இயேசு சொல்லுகிறார். தங்கள் பதவியை தக்கவைத்துக்கொள்ளவும், புகழாரம் பெறவும், மற்றவர்கள் செய்யமுடியாததை—சில பெரிய வேலைகளை தாங்கள் செய்வதற்காக பாராட்டப்படவும் அவர்கள் எப்போதும் முயற்சிக்கிறார்கள். தாழ்மையும் துரதிஷ்டமும் கொண்டவர்களோடு தோழமை கொள்ளக்கூடாதபடி, அவர்களுடைய குணம் தடுக்கிறது. முழுவதும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்றுக்கொள்ளக்கூடாத இந்த கடமைகளை அவர்கள் விலக்கக் காரணம், அவர்களுடைய மிக உயர்ந்த சுயநலமே. அவர்களுடைய அனைத்து செய்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் பிரியமான சுயமே மையமாக இருக்கிறது.

தூதர்கள் தொழுதுகொண்டிருந்த, கனத்திலும், ஒளியிலும்,மகிமையிலும் ஐசுவரியமானவராயிருந்த பரலோகத்தின் மகத்துவமானவர், பூமிக்கு

வந்தார். தன்னை மனிதனாக கண்டபோது, அபாக்கியசாலிகளிடமிருந்து தன்னை தனிமைப்படுத்தி வைத்துக்கொள்ளுவதற்காக தன்னுடைய உயர்ந்த இயல்பை அவர் காரணம் காட்டி மன்றாடவில்லை. துன்பப்பட்ட ஏழைகளாயிருந்த வேதனையிலிருந்த தேவையிலிருந்தவர்களுக்கு மத்தியில் வேலை செய்துகொண்டிருந்தார். தூய்மைக்கும் சுத்தத்திற்கும் கிறிஸ்துதான் உறைவிடம். அவருடைய வாழ்க்கையும் குணமும் உயர்ந்தவை. என்றாலும், உயர்ந்த பதவியிலிருந்தவர்களுக்கு மத்தியில் அல்ல, இந்த உலகில் மிக மதிப்புள்ளவர்கள் மத்தியில் அல்ல, புறக்கணிக்கப்பட்டு, தேவையிலிருந்தவர்களுக்கு மத்தியில் அவர் தம்முடைய பணியில் ஈடுபட்டிருந்தார். "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்று தெய்வீக ஆசிரியர் கூறுகிறார். மிக அதிகமாக உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவிசெய்கிறவராகவே பரலோகத்தின் மகத்துவமானவர் எப்போதும் காணப்பட்டார். மிகவும் அதிகமான உதவி தேவைப்படுவோருக்கு உதவுவது தங்களுடைய சுவைக்கும் உயர்ந்த அழைப்பிற்கும் கீழானது என்று கருதுகிற தங்கள் பரிதாபமான சுயத்தால் கவரப்பட்டிருக்கிறவர்களை கிறிஸ்துவின் உதாரணம் வெட்கப்படுத்தட்டும். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய ஆண்டவருடைய மேலான இடத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், யாரோடு பழகி உதவிசெய்வது அவர்களுடைய உணர்வுகளுக்கு அதிர்ச்சி கொடுத்திருந்ததோ, அவர்களைக் காட்டிலும் தாங்கள் தாழ்வானவர்களாக இருப்பதை கண்டு முடிவில் திகைப்பார்கள். எஜமானனோடு இணைந்திருப்பதும், அவரோடு சேர்ந்து மிக அதிகமான உதவி தேவைப்படுகிறவர்களுக்கு உதவுவதும் எப்போதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், இன்பமானதாகவும் இருக்காது என்பது உண்மைதான். ஆனால் இந்த வேலையைச் செய்யும்படியாகத்தான் கிறிஸ்து தம்மைத் தாழ்த்தினார். ஊழியக்காரன் தன் எஜமானனிலும் பெரியவனா? அவர் நமக்கு மாதிரியைத் தந்திருக்கிறார். அதைப் பின்பற்றும்படி கட்டளையும் கொடுக்கிறார். இது ஏற்றுக்கொள்ளக்கூடாததாயிருக்கலாம் என்றாலும், அப்படிப்பட்ட வேலையைச் செய்யும்படி கடமை கோருகிறது.

அசாதாரணமான அறிவையும் திறமையையும் பெற்றிருக்கிற ஆண்களையும் பெண்களையும் கட்டுப்படுத்துகிற மிருக உணர்ச்சிகளின் வல்லமையான செல்வாக்கை நான் ஆழமான உணர்ந்திருக்கிறேன். மட்டமான உணர்ச்சிகளால் அடிமைப்படுத்தப்படாத பட்சத்தில், நல்ல வேலையில் ஈடுபடவும், வல்லமையான செல்வாக்கை ஏற்படுத்தவும் அவர்களால் கூடும். நியாயத்தீர்ப்பைக்குறித்த, அவர்களை தேவனுடைய நியாயசபையின் முன்பாக கொண்டுவந்து நிறுத்துகிறதைப் போன்ற மிக பவித்திரமான, உணர்த்துகின்ற பயப்படவும் நடுங்கவும் வைத்த

சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறார்கள். என்றாலும் ஒருமணி நேரம்கூட சென்றிருக்காது; அதற்குள் மீண்டும் தங்களுடைய விருப்பமான— உள்ளத்தை கொள்ளைகொள்ளும் பாவத்தில் ஈடுபட்டு தங்கள் சொந்த சரீரங்களை தீட்டுப்படுத்த நுழைந்திருக்கிறார்கள். தங்களது உணர்ச்சிகளை கட்டுப்படுத்த அவர்களுக்கு வல்லமையே இல்லை என்று காணப்படுவதைப் போன்று இந்தப் பயங்கரமான குற்றத்திற்கு அடிமைகளாயிருக்கிறார்கள். சிலருக்காக நாங்கள் ஊக்கமாக உழைத்தோம். அவர்களிடம் மன்றாடி, அவர்களுக்காக அழுது ஜெபித்தோம். என்றாலும், எங்களுடைய அனைத்து முயற்சிகளுக்கும் மனவேதனைகளுக்கும் மத்தியில் பாவ பழக்கத்தின் வலிமை மேற்கொண்டது. இந்தப் பாவங்கள் செய்யப்படும். குற்ற உணர்வுடைய சிலரின் மனசாட்சி, மிகக் கொடிய வியாதிகளாலும் அல்லது வல்லமையாக உணர்த்தப்பட்டதாலும் எழுப்பப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்ட சாட்டையடி இவைகளை மிக ஆழமான தாழ்மையோடு அறிக்கை செய்யும்படியாக அவர்களை நடத்தினது. மற்றவர்கள் குற்ற உணர்வுடனேயே இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பாவத்தை ஏறக்குறைய தங்களுடைய வாழ்நாள் முழுவதும் செய்துகொண்டிருக்கிறார்கள். உடைந்துபோன தங்களுடைய சரீரத்தினாலும், சல்லடைபோன்ற ஞாபகசக்திகளாலும், இந்த அழிக்கிற பழக்கத்தின் விளைவுகளை அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள். என்றாலும் அவைகளை அறிக்கை செய்யக்கூடாத அகந்தையோடிருக்கிறார்கள். அவர்கள் இரகசியமாக இருந்து, இந்த மாபெரும் பாரம் மற்றும் துன்மார்க்கத்தைக்குறித்த மனசாட்சியின் உளைச்சலை வெளிக்காட்டாதிருக்கிறார்கள். தேவனுடைய ஆவியானவரின் செல்வாக்கிற்கு அவர்கள் உணர்வற்றவர்களாக இருப்பதுபோலத் தெரிகிறது. பரிசுத்தமுள்ளதும் பரிசுத்தமில்லாததும் ஒரே போன்றதாக அவர்களுக்கு இருக்கிறது. தங்களுடைய சொந்த சரீரங்களையே கெடுத்த, தரந்தாழ்த்துகிற இந்த தீயப் பழக்கம், கசப்பான கண்ணீருக்கும் மனதிலிருந்து வரும் வருத்தத்திற்கும் அவர்களை நடத்தவில்லை. தங்களுடைய பாவம் தங்களுக்கு மாத்திரமே எதிரானது என்று உணருகிறார்கள். இங்கேதான் அவர்கள் தவறு செய்கிறார்கள். அவர்களுக்கு சரீரத்திலோ மனதிலோ வியாதி வருமானால், மற்றவர்களும் அதை உணர நடத்தப்படுகிறார்கள். மற்றவர்களும் துன்பப்படுகிறார்கள். தவறுகள் இழைக்கப்படுகின்றன. ஞாபக சக்தியும் குறைவுபடுகிறது. சிந்தனையும் தவறாயிருக்கிறது. எங்குபார்த்தாலும் குறை இருப்பதால், அவர்கள் யாருடம் வசிக்கிறார்களோ, யாருடம் தோழமை கொண்டிருக்கிறார்களோ, அவர்களை அது தீவிரமாக பாதிக்கிறது. இந்தக் காரியங்கள் மற்ற ஒருவருக்குத் தெரியவந்ததைக்குறித்த அவமானத்தையும் வருத்தத்தையும் அடைகிறார்கள்.

ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்கிற தீய பழக்கத்தின் பலத்தை விளக்கவே இந்த நிலைமைகளைக் குறிப்பிட்டேன். மனம் முழுவதும் கீழ்த்தரமான உணர்ச்சிக்குக் கொடுக்கப்படுகிறது. சன்மார்க்கம் மற்றும் அறிவு அனைத்தும் கீழான வல்லமைகளால் மேற்கொள்ளப்படுகின்றன. சரீரம் பலவீனப்பட்டு, மூளை பலத்தை இழக்கிறது. சரீரத்தை போஷிக்க வைக்கப்பட்டிருந்த பொருட்களெல்லாம் வீணடிக்கப்பட்டுவிட்டன. சரீரத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டியவை மிக அதிகம். மூளையின் நுண்ணிய நரம்பு, இயற்கைக்கு மாறாக, உந்தப்பட்டதினால், உணர்விழந்து, ஒரு அளவு முடமாகியிருக்கிறது. சன்மார்க்க அறிவுத்திறமைகள் பெலவீனமடைய மிருக உணர்ச்சிகள் மிக அதிகமாக பழக்கப்படுத்தப்பட்டதினால் பெலமடைந்துவருகின்றன. ஆரோக்கியமற்ற உணவுகளின்மேல் கொண்ட பசி, இன்னும் அதில் திளைக்க இரைச்சல் போடுகிறது. (ஆரவாரிக்கிறது). சுயத்தைத் தவறாக உபயோகிக்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்ட மனிதர்களை அவர்களுடைய சன்மார்க்க உணர்வுகளுக்கும் நித்தியமான காரியங்களைப் போற்றுவதற்கும் முழுமையாக எழுப்புவது கூடாத காரியம். ஆவிக்குரிய செயல்களில் மகிழ்ச்சிகொள்ள அவர்களை நடத்த உங்களால் கூடாது. தூய்மையற்ற சிந்தைகள் அவர்களை சிறைபிடித்து கற்பனையைக் கட்டுப்படுத்தி மனதை வசீகரிக்க, தூய்மையற்ற செயல்கள்மேல் கட்டுப்படுத்தக்கூடாத ஆர்வம் தொடருகிறது. உயர்ந்த காரியங்களை தியானிக்க மனது கற்பிக்கப்படுமானால், தூய்மையும் பரிசுத்தமுமான காரியங்களை பிரதிபலிக்க கற்பனை பயிற்றுவிக்கப்படுமானால், அது இந்த பயங்கரமான கீழ்த்தரமாக்குகின்ற ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிகிற திளைப்பிற்கு எதிராக பாதுகாக்கப்படும். மகிழ்ச்சியோடு உயர்ந்த பரலோக, தூய்மையான பரிசுத்தமான காரியங்களில் தரித்திருக்க அது பழகியிருக்கும். இந்த கீழ்த்தரமான கெடுக்கிற கெட்ட திளைப்பினால் கவரப்பட முடியாதுபோகும்.

பிரகாசிக்கிற சத்திய ஒளியிலேயே வாழ்ந்திருக்கும்போதும், பாவத்தின் குற்றத்தின் வழியை அனுதினமும் பின்பற்றி பழக்கப்படுத்தி வருகிறவர்களைக்குறித்து என்ன சொல்லக்கூடும். விலக்கப்பட்ட உணர்ச்சியூட்டுகிற இன்பங்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியாயிருந்து, அவர்களுடைய முழு சரீரத்தையும் கட்டிவைத்து கட்டுப்படுத்துகிறது. அப்படிப்பட்டவர்கள் அநீதியிலும், அக்கிரமத்திலும் இன்பங்கொள்ளுகிறார்கள். அவர்கள் அருவருப்பான ஒவ்வொன்றோடும் தேவனுடைய நகரத்திற்கு வெளியே அழியவேண்டும்.

பெற்றோர்களை அவர்களுடைய கடமைகளுக்கு எழுப்பிவிடும்படி நான் வகைதேடினேன். அவர்களோ, தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் பிள்ளைகள் இரகசியமான தீய பழக்கங்களை பழக உங்களை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் அக்கிரமத்தை இரகசியமாக செய்யக்கூடாத நல்ல பிள்ளைகள் அப்பாவிகள் என்று நினைத்து அவர்கள்மேல் உள்ளார்ந்த நம்பிக்கையை வைத்திருக்கிறீர்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேற்றி, (போற்றி) செல்லமாக நடத்தி, அவர்களை பெருமையில் திளைக்க வைக்கிறார்கள். அவர்களை உறுதியாகவும் தீர்மானமாகவும் கட்டுப்படுத்துவது இல்லை. பிள்ளைகளுடைய பிடிவாத ஆவியைக் குறித்து பயப்படுவதினால், அவர்களோடு தொடர்புவைக்க பெற்றோர்கள் பயப்படுகிறார்கள். ஆனால் ஏலிக்கு விரோதமாக இருந்த நெகிழப்பட்ட பாவமே அவர்களுடைய பாவமாக இருக்கும். நித்தியத்திற்காகப் போராடுகிற அனைவருக்கும் பேதுருவின் போதனை மிக மதிப்புள்ளதாயிருக்கும். அவர்களைப்போன்ற அருமையான விசுவாசம் கொண்டவர்களுக்கு:

“ நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது: தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலேநமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே,

உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:1-11) என்கிறார் பேதுரு.

அறிவும் வெளிச்சமும் பெருகியிருக்கிற உலகத்தில் நாம் இருக்கிறோம். அதேபோன்ற அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களென்று தங்களை அழைத்துக்கொள்ளுகிற அநேகர் மனதார அறியாமலிருக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் வெளிச்சம் இருக்கிறது என்றாலும், அதை தங்களுக்குள் போற்றுகிறதில்லை. தெரிந்துகொள்ளவும் அறிவைப் பெற்றுக்கொள்ளவும், பெற்றுக்கொண்ட அறிவை திருமண வாழ்க்கையில் உபயோகிக்கவும் வேண்டிய அவசியத்தை பெற்றோர்கள் காண்பதில்லை. அவர்கள் அப்போஸ்தலனுடைய அறிவுரையை பின்பற்றி, கூட்டிக்கொள்ளும் திட்டத்தின்படி வாழ்ந்தால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் கனியற்றவர்களாக இருக்கமாட்டார்கள். அநேகர் பரிசுத்தமாகுதலை புரிந்துகொள்ளவில்லை. அது முன்னேறுகின்ற ஒருவேலை. அது ஒரு நாளிலோ அல்லது ஒருமணி நேரத்திலோ கிடைக்கப்பெற்று, தங்கள் பங்கிற்கு எதுவுமே செய்யாதபோதும் பராமரிக்கப்படுகிற ஒன்று அல்ல. கூட்டவேண்டிய காரியங்களில் முதலானதை பெற்றுக்கொண்டதுமே, தாங்கள் பரிசுத்தமடைந்துவிட்டதாக அநேகர் எண்ணகிறார்கள்போலத் தோன்றுகிறது.

திருமண வாழ்க்கையைக்குறித்து பெற்றுக்கொள்ளவேண்டிய அறிவை அநேக பெற்றோர்கள் அடைவதில்லை. சாத்தான் சாதகமாக நுழைந்து, தங்கள் மனதையும் வாழ்க்கையையும் கட்டுப்படுத்தாதபடி அவர்கள் காவலில் இல்லை. எந்த ஒரு எல்லைக்கும் போய்விடாதபடி அவர்கள் தங்கள் திருமண வாழ்க்கையை கட்டுப்படுத்தவேண்டும் என்று தேவன் விரும்புகிறதை அவர்கள் காண்கிறதில்லை. என்றாலும், தங்களுடைய உணர்ச்சிகளை ஆட்சிசெய்வது தங்களுடைய ஆவிக்குரிய கடமை என்பதை சிலர் உணருகிறார்கள். தாங்கள் தெரிந்துகொண்ட நோக்கத்திற்காக திருமணத்தில் தங்களை இணைத்திருப்பதால், திருமணம் கீழ்த்தரமான உணர்ச்சிகளைப் பரிசுத்தப்படுத்துகிறது என்ற காரணப்படுத்துகிறார்கள். தேவபக்தியுள்ளவர்களென்று கூறிக்கொள்ளும் ஆண்களும் பெண்களுங்கூட இச்சையான உணர்ச்சிகளுக்கு கட்டுப்பாடின்றி இருந்து, தேவன்மேலிருக்கிற அவர்களுடைய பிடியை பெலவீனப்படுத்தி

முழு சரீரத்தையும் பலமிழக்கச் செய்கிற உயிர்சக்தியை செலவழிப்பதில் தேவனுக்கு நாம் கணக்குக்கொடுக்கவேண்டும் என்கிற சிந்தையின்றி இருக்கிறார்கள்.

மிக இருண்ட கூக்குரலிடுகிற பாவங்களை திருமண உடன்படிக்கை மூடுகிறது. தேவபக்தியுள்ளவர்களென்று கூறிக்கொள்ளுகிற சில ஆண்களும் பெண்களும் கெட்டுப்போன உணர்ச்சிகளில் திளைப்பதினால், தங்கள் சொந்த சரீரங்களை கீழாக்குகிறார்கள். அது அவர்களை மிருகங்களைக் காட்டிலும் தாழ்த்துகிறது. பரிசுத்தத்திலும் கனத்திலும் காத்துக்கொள்ளப்பட தேவன் கொடுத்திருக்கும் வல்லமைகளை அவர்கள் தவறாக உபயோகிக்கிறார்கள். கீழான உணர்ச்சிகளின் பீடங்களுக்கு ஆரோக்கிய வாழ்க்கை பலிகொடுக்கப்படுகிறது. உயர்ந்த நேர்மையான வல்லமைகள் மிருக பற்றுகளின்கீழ் கொண்டுவரப்படுகின்றன. இவ்வாறு பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய பழக்கங்களின் விளைவுகளோடு அறிமுகப்படவில்லை. தங்களுடைய தவறான பாவ திளைப்பினால், தங்கள்மேல் கொண்டுவரும் பாடுகளின் அளவை அனைவராலும் காணமுடிந்தால், அவர்கள் எச்சரிப்படைவார்கள். அப்படிப்பட்ட பயங்கரமான விளைவுகளைக் கொண்டுவருகின்ற பாவப்பழக்கங்களை சிலர் நிறுத்தவாவது செய்வார்கள். ஜீவனைவிடவும் மரணமே நல்லது என்று சொல்லும்படியாக ஒருமிகப்பெரிய வகுப்பார்மேல் துயரமான ஜீவியம் இணைக்கப்பட்டிருக்கிறது. மிருக உணர்ச்சிகளில் மிக அதிகமாக திளைத்த அவமகிமையான செய்கையால் வாழ்க்கை பலிகொடுக்கப்பட அநேகர் காலத்திற்குமுன் மரித்தும்போயிருக்கிறார்கள். ஏனெனில் தங்களுக்குத் திருமணமாகிவிட்டதால், பாவம் செய்வதில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இந்த ஆண்களும் பெண்களும் இச்சையென்றால் என்ன என்கிறதை கற்று, அதை திருப்தி செய்ததன் விளைவுகளை ஒரு நாள் காண்பார்கள். திருமணத்திற்கு வெளியே இருப்பதைப்போலவே திருமணத்திற்கு உள்ளேயும் உணர்ச்சிகள் கீழ்த்தரமானதாகக் காணப்படலாம். மனைவிகளை நேசிக்கும்படி அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்துகிறான். கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததைப்போல "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; ... அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப்

போஷித்துக்காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்” (எபே. 5:25,28,29). தூய்மையான அன்பு தன்னுடைய இச்சையை நடப்பிக்கும் ஒரு கருவியாக தன் மனைவியை பார்க்க ஒரு மனிதனை நடத்தாது. திளைக்கும்படியாக ஆரவாரிப்பது மிருக உணர்ச்சிகளே. அப்போஸ்தலனால் குறிக்கப்பட்டபடி வெகு சிலலே தங்கள் அன்பை காண்பிக்கிறார்கள். “ தாம் அதை ... சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.” திருமண உறவில் பரிசுத்தமென்று தேவன் உணருகிற தரம் இதுதான். அன்பு தூய்மையின் பரிசுத்தமான கொள்கை. இச்சையோடுகூடிய உணர்ச்சி, கட்டுப்பாட்டை அனுமதிக்காது. அது ஆட்சிசெய்யப்படவோ அல்லது அறிவினால் கட்டுப்படுத்தப்படவோ முடியாது. அது விளைவுகளுக்கு குருடாயிருக்கும். காரணங்களிலிருந்து விளைவுகளுக்கு கொண்டுவராது. தங்களுடைய சரீரத்தின் நியதிகள் கருத்தில் கொள்ளப்படாததினால் தங்கள்மேல் கொண்டுவரப்பட்ட மிகப்பெரிய சோர்வுகளாலும், நிலையான வியாதியினாலும் அநேக பெண்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இயற்கையின் நியதிகள் மிதிக்கப்பட்டன. கீழான உணர்ச்சிகளை திருப்திப்படுத்தும்படி, ஆண்களும் பெண்களும் இயற்கைக்கு மாறான செயல்களில் ஈடுபட்டதால், மூளை நரம்பு ஆகியவைகளின் பெலமெல்லாம் வீணடிக்கப்பட்டிருக்கிறது. இந்த பயங்கரமான கோர உருவம், கீழான கீழ்த்தரமான உணர்ச்சி, அன்பு என்கிற மென்மையான பேரை தன்மேல் எடுத்துக்கொள்ளுகிறது.

கிறிஸ்தவர்களென்று கூறிக்கொள்ளும் அநேகர் தெய்வீகமா யிருப்பதற்கு மாறாக, அதிக மிருக குணங்களோடிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் மிருகங்களாகவே இருக்கிறார்கள். நேசித்து போஷிப்பேன் என்று வாக்குக்கொடுத்த மனைவியை இப்படிப்பட்ட மனிதர்கள் தரந்தாழ்த்துகிறார்கள். தன்னுடைய கீழான இச்சையின் இயற்கையை திருப்திப்படுத்த உழைக்கும் ஒரு கருவியாக அவனால் அவள் ஆக்கப்பட்டிருக்கிறாள். இச்சையின் உணர்ச்சிகளுக்கு அடிமைகளாகும்படி அநேக பெண்கள் ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் சரீரங்களை பரிசுத்தத்திலும் கனத்திலும் கொண்டில்லை. திருமணத்திற்கு முன்பு கொண்டிருந்த கௌரவத்தையும் சுயமரியாதையையும் அவள் தக்கவைத்துக்கொள்ளுவதில்லை. இந்த பரிசுத்த நியமம் அவளுடைய பெண்மையின் மரியாதையையும் பரிசுத்த கௌரவத்தையும் பாதுகாத்து அதிகப்படுத்தியிருக்கவேண்டும். அவளுடைய கற்புள்ள கௌரவமான

தேவத்துவமான பெண்மை, கீழான உணர்ச்சிகளின் பீடத்தில் விழுங்கப்பட்டது. தன்னுடைய கணவனை இன்பப்படுத்தும்படி தியாகம் செய்யப்பட்டது. மிருக சிருஷ்டிகள்கூட கீழ்ப்படிந்து வருகிற சட்டங்களை கருத்தில் கொள்ளாத தனது கணவன் மேலிருக்கும் மரியாதையை அவள் விரைவாக இழக்கிறாள். அன்பு மரித்துப்போய் பலவேளைகளில் நம்பிக்கையின்மையும் பொறாமையும் வெறுப்பும் அதன் இடத்தை எடுத்துக்கொள்ளுவதால், திருமண வாழ்க்கை சிறுமைப்படுத்தும் நுகமாக மாறுகிறது.

அடிமையாயிருக்கும்படியாக, அவனுடைய கீழான உணர்ச்சிகளுக்கு உழைக்க மனைவி பொறுமையாக சமர்ப்பிப்பதால், எந்த மனிதனும் தன்னுடைய மனைவியை உண்மையாகவே நேசிக்கமுடியாது. ஒரு காலத்தில் அவன் பார்வையில் அவள் கொண்டிருந்த மதிப்பை எதிர்பில்லாத தன்னுடைய சமர்ப்பித்தலில் அவள் இழக்கிறாள். உயர்த்துகிற அனைத்திலிருந்தும் கீழாக கீழ்நிலைக்கு அவள் இழுக்கப்பட்டதை அவன் காண்கிறான். விரைவில், அவள் தன்னைப்போலவே மற்றொருவனாலும் கீழ்ப்படுத்தப்பட சமர்ப்பிப்பாள் என்று சந்தேகிக்கிறான். அவளுடைய சீரான தன்மையையும் தூய்மையையும் அவன் சந்தேகித்து, அவளில் களைப்படைந்து, தன்னை உசுப்பி தன்னுடைய நரக உணர்ச்சிகளை தீவிரப்படுத்துகிற புதிய இலக்குகளை தேடுகிறான். தேவனுடைய பிரமாணம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இந்த மனிதர்கள் மிருகங்களைவிடவும் மோசமானவர்கள்; அவர்கள் மனித உருவில் இருக்கும் பிசாசுகள்; உண்மையான பரிசுத்தமான அன்பின் உயர்த்துகிற நேர்மைப்படுத்துகிற கொள்கைகளோடு அறிமுகமில்லாதவர்கள்.

மனைவி கணவன்மேல் பொறாமை கொள்ளுகிறாள். சந்தர்ப்பம் நேரிட்டால், தனக்கு கவனம் கொடுத்ததைப்போலவே மற்றவருக்கும் துரிதமாக கொடுத்துவிடுவானோ என்று சந்தேகிக்கிறாள். அவன் மனசாட்சியினாலும் தேவனுக்குப் பயப்படும் பயத்தினாலும் கட்டுப்படுத்தப்படவில்லை என்று அவள் காண்கிறாள். பரிசுத்தமான இந்த அனைத்து தடுப்புகளும் இச்சையான உணர்ச்சிகளால் தகர்க்கப்படுகின்றன. கணவனில் இருக்கிற தேவ குணங்கள் எல்லாம் கீழான மிருக இச்சையின் வேலைக்காரர்களாக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட ஒழுங்கைக் கொண்டிருக்கிற ஆண்களாலும் பெண்களாலும் இந்த உலகம் நிரம்பியிருக்கிறது. சுத்தமான சுவையான ஆமாம் விலையேறப்பெற்ற வீடுகள் தங்களுக்குள் நரகத்தைக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் எப்படியிருப்பார்கள் என்று உங்களால் முடிந்தால் கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் தங்கள் பெற்றோரைக்காட்டிலும் கீழ்த்தரமாக இருக்கமாட்டார்களா? இந்தப்

பெற்றோருக்கு பிறக்கும் பிள்ளைகள் அவர்களிலிருந்து கீழான கீழ்த்தரமான ஒழுக்கத் தகுதிகளை சுதந்தரிக்கிறார்கள். கெட்டுப்போவதற்கேதுவான எதையும் சாத்தான் போஷிக்கிறான். கீழ்த்தரமான உணர்ச்சிகளைவிட வேறு எதுவும் தன் கணவனை கட்டுப்படுத்தவில்லை என்பதை அவள் காணும்போது, பரிசுத்தமாகவும் கனமாகவும் கொண்டிருந்து ஜீவ பலியாக தேவனுக்கு கொடுக்கும்படி அவர் தன்னிடம் கொடுத்திருக்கிற சரீரத்திற்கு காயம் உண்டாக்குகிறதற்கேதுவாகவே செய்கிறாய் என்று அவளுடைய அறிவும் மனதும் அவளுக்கு உணர்த்தும்போது, தன் கணவனுடைய அதிகாரங்களுக்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க கட்டப்பட்டிருப்பதாக மனைவி உணரவேண்டுமா என்பதே முடிவு செய்யப்படவேண்டிய காரியம்.

தன்னுடைய ஆரோக்கியத்தையும் ஜீவனையும் பணயம் வைத்து, தன்னுடைய கணவனின் மிருக குணங்களை திருப்திப்படுத்த மனைவியை நடத்துவது தூய்மையான பரிசுத்தமான அன்பு அல்ல. அவள் மெய்யான அன்பையும் ஞானத்தையும் கொண்டிருந்தாளானால், தன்னுடைய கணவனின் மனதை இச்சையான உணர்ச்சிகளை திருப்திப்படுத்துவதிலிருந்து உயர்ந்த ஆவிக்குரிய நோக்கங்களுக்கு விருவிருப்பான ஆவிக்குரிய காரியங்களில் நுழைவதின்வழியாகத் திருப்புவாள். மிஞ்சிய பாலீடுபாட்டினால் தன்னுடைய சரீரத்தின் தரத்தை குறைக்கமுடியாது என்கிறதை, அவனுடைய வெறுப்பையே சம்பாதிக்கவேண்டியதிருந்தாலும், தாழ்மையோடும் பிரியத்தோடும் நிர்ப்பந்திக்கவேண்டிய அவசியம் உண்டாகலாம். தன் முழு சரீரத்தின்மேலும் தேவனே முதன்மையான மிக உயர்ந்த உரிமை கொண்டிருக்கிறார் என்றும், தேவனுடைய பெரிய நாளில் அவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியதிருப்பதால் அவருடைய உரிமைகளைப் அவளால் அலட்சியப்படுத்தமுடியாது என்றும் இளகின தயவான முறையில் அவனுக்கு அவள் நினைவுபடுத்தவேண்டும். “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” “நீங்கள் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்” - 1 கொரி. 6:19,20; 7:23.

பெண், தன்னுடைய நியாயமான செல்வாக்கின்மூலமாகவும், தன்னுடைய பிரியத்தை உயர்த்துவதினாலும், பரிசுத்தத்தினாலும் கனத்தினாலும் தன்னுடைய சுத்திகரிக்கப்பட்ட பெண்மையின் கௌரவத்தை காப்பதின் வழியாகவும் அதிகம் செய்யமுடியும். அவள் இப்படிச்

செய்வதினால், தன் கணவனையும் தன்னையும் காப்பாற்றி, இவ்விதம் தன்னுடைய உயர்ந்த ஊழியத்தை நிறைவேற்றி, தன் செல்வாக்கினால் தன் கணவனைப் பரிசுத்தப்படுத்தி, இரட்டை வேலையைச் செய்யமுடியும். கையாளவேண்டிய இந்த மென்மையான கடினமாக விஷயத்தில் அதிகமான ஞானமும் பொறுமையும், அதைப்பேலவே சன்மார்க்க தைரியமும் மனபலமும் அவசியம். பலமும் கிருபையும் ஜெபத்தில் கண்டடையலாம். மெய்யான அன்பே அவனுடைய இருதயத்தை ஆளும் கொள்கையாக இருக்கவேண்டும். தேவன்மேலிருக்கும் அன்பும் கணவன்மேலிருக்கும் அன்புமே வேலைசெய்யவேண்டிய சரியான ஒரு தளமாக இருக்கமுடியும்.

தன்னுடைய சரீரத்தின்மேல் முழு கட்டுப்பாடும் கொண்டிருப்பது கணவனுடைய தனிச்சிறப்புரிமை என்றும், ஒவ்வொன்றிலும் அவனுடைய மனதிற்கேற்ப தன் மனதை மாற்றி, அவன் ஓடுகிற அதே பாதையில் தானும் ஓடத் தீர்மானித்தால், அவள் தன்னுடைய தனித்தன்மையை விட்டுக்கொடுக்கிறாள். அவளுடைய அன்புள்ளம் தொலைந்துபோய், அவளுடைய கணவனுடையதில் மூழ்கிப்போகிறது. தன்னுடைய விருப்பத்திற்கும் இன்பத்திற்கும் ஏற்ப நகர்த்தவும் கட்டுப்படுத்தவும் அவள் ஒரு இயந்திரமாகிறாள். அவனுக்காக யோசித்து, அவனுக்காக தீர்மானித்து, அவனுக்காக செயல்படுகிறாள். இந்த அடங்கிப்போகிற நிலையில் அவள் தேவனை கனவீனப்படுத்துகிறாள். தேவனுக்கு முன்பாக அவளுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அதை காப்பது அவளுடைய கடமை.

மனைவி தன்னுடைய சரீரத்தையும் மனதையும் தன்னுடைய கணவனுடைய கட்டுப்பாட்டிற்கு விட்டுக்கொடுத்து, அவனுடைய சித்தத்திற்கு எல்லாவற்றிலும் அடங்கிப்போய் தன்னுடைய மனசாட்சியையும் கௌரவத்தையும் தன் அடையாளத்தையுங்கூட தியாகம் பண்ணும்போது, தன்னுடைய கணவனை உயர்த்துகிறதற்கேதுவாக அவள் பெற்றிருக்கிற நன்மைக்கேதுவான வல்லமையான செல்வாக்கை செயல்படுத்தும் சந்தர்ப்பத்தை இழக்கிறாள். அவனுடைய பிடிவாதமான குணத்தை அவள் மென்மையாக்கலாம். அவளுடைய பரிசுத்தப்படுத்தும் செல்வாக்கு, அவனை சுத்திகரித்து, தூய்மைப்படுத்தி, தன்னுடைய உணாச்சிகளை கட்டுப்படுத்த ஊக்கமாக தேடும்படி அவனை நடத்தி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி இருவருமாகச் சேர்ந்து அந்த தெய்வீக சுபாவத்தில் பங்கெடுக்கிறதற்கேதுவாக அதிக ஆவிக்குரிய சிந்தையோடிருக்க அவன்மேல் செலுத்தப்படலாம். கிருபையினால் புதுப்பிக்கப்படாத இருதயம் இயற்கையாகத் தேடுகிற கீழான சிற்றின்ப திளைப்புகளுக்கு மேலாக, உயர்ந்த உன்னதமான நோக்கங்களுக்கு மனதை நடத்துவதற்கேதுவாக

செல்வாக்கின் வல்லமை பெரியதாக இருக்கமுடியும். மிருக உணர்ச்சிதான் அவனுடைய அன்பின் முதன்மையான அடித்தளமாயிருந்து அவனுடைய செயல்களைக் கட்டுப்படுத்தும்போது, மனைவி தன்னுடைய கணவனை பிரியப்படுத்தும்படி அவனுடைய தரத்திற்கு கட்டாயம் இறங்கிவரவேண்டும் என்று உணருவாளானால், அவள் தேவனுக்கு வருத்தமுண்டாக்குகிறாள். ஏனெனில் தன் கணவன்மீது பரிசுத்தப்படுத்தும் செல்வாக்கை ஏற்படுத்த அவள் தவறுகிறாள். எந்தவித எதிர்ப்புமின்றி தன் கணவனுடைய மிருக உணர்ச்சிகளுக்கு கட்டாயம் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று அவள் உணருவாளானால், தன் கணவனுக்குச் செய்யவேண்டிய கடமையையாவது, தன் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையையாவது அவள் புரிந்திருக்கவில்லை. மிஞ்சிய பாலீடுபாடு பக்திக்கடுத்த செயல்பாட்டின்மேலிருக்கும் அன்பை அழிக்கும்; சரீரத்தை போஷிக்கத் தேவையான பொருளை மூளையிலிருந்து அகற்றும்; உயிர்பெலத்தை முழுவதும் செலவழித்துவிடும். சுயத்தை அழிக்கும் இந்த வேலையில் எந்தப் பெண்ணும் தன் கணவனுக்கு உதவக்கூடாது. உணர்வடைந்து, தன் கணவனை மெய்யாக நேசிப்பாளானால், அவள் செய்யமாட்டாள்.

மிருக உணர்ச்சிகள் அதிகம் திளைக்கப்பட்டு, செயல்படுத்தப் படும்போது, அவைகள் பெலமடைந்து, அவைகளில் திளைக்கும் இரைச்சல் மிகக் கோரமானதாக ஆகின்றது. தேவனுக்குப் பயப்படுகிற ஆண்களும் பெண்களும் தங்கள் கடமைகளுக்கு எழும்பட்டும். கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொள்ளுகிற அநேகர், இந்தக் காரியத்தில் இச்சையடக்கமின்றி இருப்பதாலே, நரம்புகள் மற்றும் மூளையின் வாதத்தால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். நல்லவர்களென்று கருதப்படுகிற ஜெபித்து, அழுகிற, உயர் ஸ்தலங்களில் நிற்கிற அநேகருடைய எலும்புகளிலும் மஞ்ஜைகளிலும் அழுகல் இருக்கிறது. அவர்களுடைய கெட்டுப்போன சவங்கள், பரலோக பட்டணத்தின் தளத்திற்குள் ஒருபோதும் நுழையாது. ஓ! தேவனுக்கு பூரணமான சேவை செய்யும்படி தங்கள் மனதையும் சரீரத்தையும் மிகச்சிறந்த நிலையில் காத்துக்கொள்ளவேண்டிய கடமையை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளச் செய்யக்கூடுமானால்!

கணவனுடைய மிருக உணர்ச்சிகளை தூண்டிவிடுவதிலிருந்து கிறிஸ்த மனைவிகள் வார்த்தையிலும் செயலிலும் விலகி இருக்கட்டும். இந்தக் காரியத்தில் வீணடிக்கிறதற்கான பெலமே அற்றவர்களாக அநேகர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மிருக உணர்ச்சிகளை திருப்திப்படுத்தினதின் வழியாக வாலிபப்பிராயத்திலிருந்தே தங்கள் மூளையை பெலவீனப்படுததி, தங்கள் தேகக்கட்டை உறிஞ்சிவிட்டார்கள்.

சுயமறுப்பும் இச்சையடக்கமும் திருமண வாழ்க்கையின் காவல் வார்த்தையாக இருக்கவேண்டும். அப்போது அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கும்போது, அவர்கள், சன்மார்க்க அறிவு சார்ந்தவைகளில் பெலவீனமும் மிருகக்காரியங்களில் பெலமும் கொண்டவர்களாக இருக்கமாட்டார்கள். பிள்ளைகளிலிருக்கும் இந்தத் தீயப்பழக்கங்கள் ஏறக்குறைய உலகளாவியதாக உள்ளது. அதற்குக் காரணம் இல்லையா? அவர்களுக்கு இந்த குணத்தின் முத்திரையைக் கொடுத்தவர் யார்?

ஆண்கள் பெண்களின் மனங்கள் தூய்மையிலும் பரிசுத்தத்திலுமிருந்து ஒரேநொடியில் கீழ்த்தரத்திற்கும் கெட்டதிற்கும் குற்றத்திற்கும் வருவதில்லை. மனிதனிலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு மாறுவதற்கு அல்லது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனதை மிருகத்திறகோ அல்லது சாத்தானின் சாயலுக்கோ தரந்தாழ்த்துவதற்கு நேரம் எடுக்கிறது. நாம் காண்கிறதினால் மாறுகிறோம். தன்னை உண்டுபண்ணினவரின் சாயலில் இருக்கும் மனிதன், தான் ஒரு காலத்தில் வெறுத்த பாவங்களை தனக்கு இன்பமானவைகளாகக் காண தன் மனதிற்குக் கற்றுத்தரமுடியும். காத்திருந்து ஜெபிப்பதை நிறுத்தும்போது, தன் தலைமையகத்தை□ இருதயத்தை காத்துக்கொள்ளுவதை நிறுத்துகிறான். பாவத்திலும் குற்றத்திலும் ஈடுபடுகிறான். மனம் தரந்தாழ்கிறது. சன்மார்க்கத்தையும் அறிவுத்திறன்களையும் அடிமைப்படுத்தி, அதிகப்படியான உணர்ச்சிகளின்கீழ் கொண்டுவரப் பயிற்றுவிக்கப்பட்ட அம்மனதை கெட்டுப்போவதிலிருந்து உயர்த்துவது கூடாததாகிறது. இது மனதை மேல்நோக்கிக் கவர்ந்து தூய்மையும் பரிசுத்தமுமான காரியங்களை தியானிக்கப் பழக்கப்படுத்துகிற தேவனுடைய கிருபையின் சுத்திகரிக்கும் செல்வாக்கின் உதவியோடு மாம்ச சிந்தைக்கு எதிராக நடக்கிற தொடர்போர்.

சன்மார்க்க அறிவுத்திறன்கள் மிகக்குறைவாகவே வளர்ந்திருக்க, அநேக குழந்தைகள் மிருக உணர்வுகள் அதிகம் கொண்டவர்களாகவே பிறக்கிறார்கள். இவர்களை வெளிக்கொண்டுவந்து, இவர்களுடைய சன்மார்க்க அறிவுத்திறன்களை முன்னேற்றவும் முன்னணியில் நிற்கவைக்கவும் இந்தக் குழந்தைகளுக்கு மிகக் கவனமாக வளர்ப்பு அவசியப்படுகிறது. குழந்தைகள் தேவனுக்காகப் பயிற்றுவிக்கப்படுவதில்லை. அவர்களுடைய சன்மார்க்க ஆவிக்குரிய கல்வி நெகிழப்படுகிறது. சன்மார்க்க திறன் பெலவீனமடைந்து கொண்டிருக்க, மிருக உணர்ச்சிகள் நிலையாக பலப்படுத்தப்படுகிறது.

சில குழந்தைகள் தங்கள் குழந்தைப்பருவத்திலேயே தங்களுடைய மிருக உணர்ச்சிகளை தூண்டிவிடத் துவங்குகிறார்கள். அவர்கள் வயதில் வளரும்போது, இச்சையான உணர்ச்சிகள் அவர்களுடனேயே

வளர்ந்து, அவர்களுடன் பலமடைகிறது. அவர்களுடைய மனது அமைதலாயிருப்பதில்லை. பெண்பிள்ளைகள் ஆண்களின் சமுதாயத்தை வாஞ்சிக்கிறார்கள். ஆண்பிள்ளைகள் பெண்களுடைய கூட்டத்தை வாஞ்சிக்கிறார்கள். அவர்களுடைய நடத்தை அடக்கமும் நன்னடத்தையுள்ளதாகவும் இல்லை. தைரியமும் துணிவும் உள்ளவர்களாக அநாகரீகமான சுதந்தரத்தை கையாளுகிறார்கள். சுயத்தை தவறான முறையில் பயன்படுத்த கெட்டப்பழக்கங்கள் அவர்களுடைய மனங்களை தரம் தாழ்த்தி, அவர்களுடைய ஆத்துமாக்களை கறைபடுத்தியிருக்கிறது. இழிவான எண்ணங்களும் கதை படிப்பதும் கீழ்த்தரமான புத்தகங்களும், காதல் கதைகளும் அவர்களுடைய கற்பனையை தூண்டி, அவர்களுடைய வக்கிரமான மனதுக்கு ஏற்றதாக இருக்கின்றன. அவர்கள் வேலைகள் செய்ய விரும்புவதில்லை. வேலையில் ஈடுபடும்போது, இளைப்பாயிருப்பதாக முறையிடுகிறார்கள். அவர்களுடைய இடுப்பு வலிக்கிறது. அவர்களுடைய தலை வலிக்கிறது. அதற்கு போதுமான காரணங்கள் இல்லையா? அவர்கள் வேலையினிமித்தமா களைப்படைகிறார்கள்? இல்லை. என்றாலும் பெற்றோர்கள் அவர்கள் முறையீடுகளை கவனித்து வேலையிலிருந்து பொறுப்புகளிலிருந்தும் அவர்களை விடுவிக்கிறார்கள். அவர்களுக்காகச் செய்யக்கூடிய மிக மோசமான காரியம் இதுவாகத்தான் இருக்கிறது. அவர்களுடைய பெலவீனப்பட்ட மனங்களின்மேல் சாத்தான் கொண்டிருந்த இலவச நுழைவிற்கு இருந்த ஒரே தடுப்பையும் அவர்கள் அப்புறப்படுத்துகிறார்கள். அவன் அவர்களை கட்டுப்படுத்தாமலிருக்க உபயோகமான வேலை ஒருவிதத்தில் ஒரு பாதுகாப்பாயிருக்கும்.

ஆரோக்கியத்தின் அடிப்படையில் எதிர்பாலினங்கள் ஒன்றுசேர வேண்டும் என்று நிலவுகிற கெடுக்கும் கொள்கை, தன்னுடைய தீங்கான வேலையைச் செய்திருக்கிறது. சாத்தான் கொண்டிருக்கும் புத்திக்கூர்மையில் பத்தில் ஒன்றை பெற்றோர்களும் பாதுகாவலர்களும் வெளிப்படுத்துவார்களானால், இந்த எதிர் பாலினக் கூடுதல் ஏறக்குறை ஆபத்தற்றதாயிருக்கும். வாலிபரின் மனங்களை வசீகரிக்கும் தன்னுடைய முயற்சியில் சாத்தான் மிகவும் வெற்றி கண்டிருப்பதால், ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் ஒன்றாக வைப்பது தீமையை இருபது மடங்கு அதிகரிக்கவே செய்கிறது. ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் உபயோகமான வேலையில் அமர்த்தப்படட்டும். அவர்கள் களைப்படையும்போது, தங்களுடைய சொந்த சரீரங்களை கெடுக்க குறைவான எண்ணம் கொண்டிருப்பார்கள். ★